24 காலணா Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு


"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லா மெடுத்தோதுவோமே"

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர்:
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நெ. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. சனி 25-3-33

"இந்தியாவே ஓடு! ஓடு!"



ஸ்வராஜ்யம் என்ற எல்லையை அடையவேண்டுமென ஆவல் கொண்டுள்ள இந்தியனை 'வெள்ளைக் கடுதாசி' என்ற கயிற்றால் பிரிட்டிஷ் துரைத்தனத்தார் பிணித்திருக்கிறார்கள். காலையும் கையையும் கட்டிப் போட்டு விட்டு 'ஓடு ஓடு' என்றால் இந்தியனால் எப்படி ஓட முடியுமென இந்திய பிரபல வியாபாரிகள் கேட்கின்றனர். தான் செய்து விட்ட சூழ்ச்சியை எண்ணி எண்ணி ஜான் புல் கொக்கரிக்க மாட்டானா?

தபாற்கூலி குறையாதாம்

பொது ஜனங்களின் சவுகரியத்துக்காக வென்று அரசாங்கங்களில் சில இலாக்காக்கள் உண்டு. தபால் இலாகா அத்தகையது. அந்த இலாக்காவை ஒரு வியாபாரத் துறையாக்கி கொள்ளை கொள்ளையாக லாபமடிக்க வேண்டுமென்று அரசாங்கங்கள் ஆசைப்படலாகாது. இந்திய அரசாங்கத்தின் போக்கோ நேர் விரோதமா யிருக்கிறது. சுறக்கும் வரை கறக்க வேண்டும் என்ற கொள்கையே மிகுந்துளது. இந்தியாவின் கொடிய வறுமை நிலைக்கும் இந்தத் தபால் விகிதங்களுக்கும் மலைக்கும் மடுவுக்குமா யிருக்கிறதே!

சர்க்காரைத் தவிர வேறெவரும் தபால் எடுத்துச் செல்லக் கூடாது என்று 'மொனுபலி' (Monopoly) சட்ட மொன்றையும் செய்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தை சர்க்காரும் ரத்து செய்து, ஒரு தனிக் கம்பெனி இந்தியத் தபால் இலாகாவை நடத்துமானால் தபால் சார்ஜுகள் கட்டாயம் குறைவதற்கு இடமுண்டு என்று அறிஞர் அபிப்பிராயப் படுகின்றார்கள். தபால் இலாகாவில் அதிகாரிகள் வாங்கும் கொழுத்த சம்பளங்களைக் குறைத்து, வீண் செலவுகளையும் சர்க்கார் குறைத்துக் கொண்டால் கார்டு, கவரின் விலையை கட்டாயமாய் இறக்க முடியும். இந்தப் பஞ்சகாலத்தில் பொது ஜனங்களுக்கு அது மிக்க சவுகர்யமும் அளிக்குமன்றோ.

கார்டு விலை காலணுவாகவும், பிறகு அரையணுவாகவும் இருந்த வருஷங்களில் தபால் இலாகாவுக்கு லாபம் வந்துகொண்டு தானிருந்ததென்பதற்கு புள்ளி விவரங்கள் வருமாறு:

1913-14ல் செலவு போக நிகர லாபம் 50 லக்ஷம்; 14-15ல் 50 லக்ஷம்; 15-16ல் 95 லக்ஷம்; 16-17ல் 1 கோடி; 17-18ல் 1½ கோடி; இப்படியாக வருமானம் வருஷா வருஷம் ஏறிக்கொண்டு தான் வந்திருக்கிறது. கார்டு, கவர், விலைகளை ஏற்றியதால் சர்க்காருக்கும் நஷ்டம்; பொது ஜனங்களுக்கும் கஷ்டம். டெல்லி சட்ட சபையில் தபாற் கூலியைக் குறைக்க வேண்டு மென்று வந்த தீர்மானத்தை சர்க்கார் அதிகாரிகள் எதிர்த்ததையும், நியமனம் செய்யப் பட்ட அண்ணுத்தைகளின் வோட்டினுல் தீர்மானத்தைத் தோற்கடித்ததையும் நோக்கும் போது தபாற் கூலி சமீபத்தில் இறங்கவே இறங்காது என்பது தெரிந்தது. இதுதான் ஒழுங்கான அரசியலோ?

பக்கா தேசத்ரோகம்!

தேசத்துக்காக தன்னலத் தியாகம் செய்வது கடினம். ஆனுல் தேசத்தைக் காட்டிக் கொடுத்து விடுவது அத்தனைக்கத்தனை சுலபம். இந்த இந்தியத் தாயின் வயிற்றில் பிறந்தும் சில உருப்படிகள் தங்கள் தாய் நாட்டையே கட்டிக் கொடுக்கத் துணிவதைக் காணும்போது வயிறு பற்றி யெரிகின்றது. நெஞ்சு குமுறுகின்றது.

ஸர் ஆல்பியன் பானர்ஜி என்று ஒருவன். ஒரு சுதேச சமஸ்தானத்தில் இவனும் 'திவான்' உத்யோகம் பார்த்ததாக நமக்கு ஞாபகம். இப்போது இங்கிலாந்துக்குச் சென்று பார்லிமெண்டு மோகம் பிடித்து, அதில் அங்கத்தினுக வேண்டுமென்று, தெருத் தெருவாக வோட்டுப் பிச்சை எடுத்துக்கொண்டு அலைகின்றுனும். பேய்க்கு வாழ்க்கைப் பட்டால் புளிய மரத்திலேற வேண்டுமென்று நினைத்தான் போலும்! ஆங்கில மக்களை 'குஷி'ப் படுத்த வேண்டுமானுல் தன் ஜன்மதேசத்தை இகழ்ச்சி செய்ய வேண்டுமென்று நினைத்து விட்டான். அங்கு ஓர் சங்கத்தில் அவன் பேசியபோது,

"இந்தியாவில் என்ன சண்டை! என்ன சச்சரவு! நவீனமான ஜனநாயக அரசியலை இந்தியாவுக்குத் தரலாமா? கூடவே கூடாது. தந்தால் ஆபத்துதான். இதுவரை ஆண்டது போல இன்னமும் இந்தியாவை பலாத்காரத்தினுல் அடக்கியாண்டே தீரவேண்டும்" என்று கூறி யிருக்கிறுன். அட புல்லுளியே! குலத்தைக் கெடுக்கவந்த கோடரியே!

அதே பிரசங்கத்தில் "சமூகச் சீர்திருத்தங்களும் மதச் சீர்திருத்தங்களும் இந்தியாவுக்கு அத்தியாவசிய மானவை" என்று ஆரம்பத்தில் சொன்ன பானர்ஜி, கடைசியில் மகாத்மா காந்தியின் தீண்டாமை விலக்கு இயக்கத்தைத் தாக்கிப் பேசி யிருக்கின்றுன். இச்சகம் பேசிப் பிழைக்கின்றவர்கள் முன்னுக்குப் பின் முறணுகவே பேசுவார்கள் என்பது உலக நியதி. அதை ஒட்டியே பானர்ஜியின் பிதற்றலுமிருக்கிறது. கடவுள் இவனை மனிதனுகப் படைத்து விட்டாரே யென்று நினைத்து இவனை மன்னித்து விட வேண்டி யிருக்கிறது. ஆனுல் ஆயிரம் பானர்ஜிகளல்ல, இரண்டாயிரம் டயர்களல்ல, மூவாயிரம் சர்ச்சில்களல்ல இத்தனை பேரும் சேர்ந்து எதிர்த்தாலும் இந்திய தேசிய வேகத்தை இனித் தணிக்க முடியாதென்பதை உலகம் அறிந்து கொள்ளுமாக!

சுதேசமித்திரன்-தமிழ்நாடு லடாய்! (திப்பு எழுதியது)

வரத வஸ்தாதும் சினிப் பயில்வானும் நண்பர்களன்று; கொடிய விரோதிகளுமன்று. ஆனால் திடீரென்று 'ஸவால்' நோட்டீஸ்கள் பறந்தன. ஒருவரை யொருவர் பலமாகத் திட்டி யிருந்தார்கள். ஊரார் கிறு கிறுத்துப் போயினர். நோட்டீஸ்களை வாங்கிப் படித்து வரி வரியாக மனப்பாடம் பண்ணிய பேர்களும் உண்டு. 'சண்டை' யென்றால் ஒரு 'ஷோக்கு' தானே! கடைசியில் சண்டை முற்றி குஸ்திப் பந்தய தினமும் குறிப்பிடப்பட்டது. குறைந்த டிக்கட் எட்டணா வானபோதிலும் 'கோதா'வில் கூட்டம் பலமாயிருந்தது. கடைசியில் வஸ்தாத் ஜெயித்தாரா, பயில்வான் ஜெயித்தாரா வென்று கேட்டு விடாதீர்கள். யார் ஜெயித்தா லென்ன? அன்றைய தினத்தின் பலனாகக் கிடைத்த வசூலை இரண்டு பேரும் பங்கு போட்டுக் கொண்டார்களாம். நோட்டீசு, வசவு, பந்தயம் எல்லாம் குஸ்தியின் தொழில் முறை! பயில்வான்கள் பட்டினி கிடப்பதா என்ன?

இந்தத் தொழில் முறை பயில்வான்களுக்கு மட்டும் 'காபிரைட்' அல்லவென்று தெரிகிறது. பத்திரிகைத் தொழிலிலும் இந்த 'முறை' புகுந்திருக்கிறது. சென்ற சில தினங்களாக சென்னைத் தினசரிகளான தமிழ் நாடும், சுதேசமித்திரனும் விடாமல் தினந்தோறும் ஒன்றை யொன்று தாக்கிக் கொண்டதைப் பார்த்த போது இது விளங்கிற்று. பத்திரிகைகள் பட்டினி கிடப்பதா என்ன?

தென்னாட்டுத் தினசரிகளின் தலையங்கங்களை நான் எப்போதும் படிப்பதில்லை யென்று வெகு நாளாக விரதம் கொண்டிருக்கிறேன். படித்தால் ஏற்படும் தூக்கத்தையோ, தலை வலியையோ எதிர்க்க எனக்குத் திராணி யில்லை. ஆனால் இந்த சமயத்தில் அந்தத் தலையங்கங்களின் விசேஷத்தை உணர்ந்து படித்தே தீர்த்தேன். அப்பாடா! சண்டை ஏற்பட்ட காரணம் இவ்வளவு தான்.

18ம் தேதியன்று 'வெள்ளைக் கடுதாசி' என்ற அபூர்வ வஸ்துவை சர்க்கார் பிரசவிப்பதாக வாக்களித்திருந்தார்கள். ஆனால் பத்திரிகாசிரியர்களிடம் மதிப்பு வைத்து, 17ம் தேதி யன்றே மேற்படி கடுதாசியின் நகலைத் தருவதற்கு சர்க்கார் இசைந்தனர். 18ம் தேதி காலை வேளைக்கு முன் அதை உலகுக்குப் பகிரங்கப் படுத்தலாகா தென்ற உறுதி மொழியையும் வாங்கிக் கொண்டனர். 'கடுதாசி'ப் பிரசாதம் விநியோகிக்கப் பட்டது. நமது 'சங்கு' பத்திராதிபருக்கும் 17ம் தேதி யன்றே அந்த தஸ்தாவேஜியின் நகல் கிடைத்தது. ஆனால் அவரோ அதை மேலெழ மேய்ந்துவிட்டு, "எல்லாம் எதிர்பார்த்த குப்பையே" என்று மேஜையின் ஓரத்தில் எறிந்து விட்டார். ஆனால் ராயப்பேட்டை சுதேசமித்திரன் பத்திராதிபருக்கோ ஆத்திரமும் ஆவலும் அதிகமா யிருந்ததாம். அன்றைக்கே உபாசிரியர்களை முடுக்கி, மொழி பெயர்த்து, வெளியூர்ப் பதிப்புகளோடு(மட்டும்) அனுப்பி விட்டாராம். "வாக்களித்தது 18ம் தேதியாயிருக்க 17ம் தேதி யன்றே அச்சிட்டனுப்பலாமா?" என்று ஜியார்ஜ் டவுன் உருப்படியான 'தமிழ் நாடு' கேட்டது. சுதேசமித்திரன் என்ற தாத்தா சும்மா இருக்கலாகாதா? "தனக்கு 50 வயது அனுபவம் உண்டென்றும் ரோடரி யந்திரம் போன்ற சவுகர்யங்களை உடையவரென்றும்" பொருள் படுமாறு பீற்றலடித்துக் கொண்டு தமிழ் நாட்டுக்குப் பதில் தந்தார். தமிழ் நாடு பதிலிறுத்தது! பதிலுக்குப் பதில்! பதிலுக்குப் பதிலுக்குப் பதில்! ஓஹோ ஹோ! சண்டை முற்றி விட்டது. "இவனென்ன எழுதி யிருக்கிறான்? அவனென்ன தாக்கி யிருக்கிறான்" என்று சில அபிமானிகள் மாற்றுப் பத்திரிகைகளுக்கு வேட்டை யாடினார்களாம். பத்திரிகை விற்க இது நல்ல சூழ்ச்சியே யன்றோ!

தலையங்கம் எழுத விஷயங்களின்றித் தவித்துக் கொண்டிருக்கும் பேனாக்களுக்கு ஏதேனும் சந்தர்ப்பம் சிருட்டித்துக் கொள்வது சாமர்த்தியம் தான். வெறும் வாயை மெல்லுவதை விட அவல் வாயை மெல்வது விசேஷம் தான். ஆனால் அதற்காக மண்ணை வாயில் போட்டுக் கொண்டு மெல்லுவதை யார் மெச்சுவார்கள்?

இப்படி சண்டைச் சொற்களைப் பொறிக்கும் பத்திகளுக்குப் பதிலாக சர்க்கார் பிரசாதமாகிய வெள்ளைக் கடுதாசியைப் பற்றி ஆராய்ந்து இன்னும் நீண்ட, நீண்ட, தலையங்கங்களை இவர்கள் எழுதி யிருந்தாலாவது கொஞ்சம் பிரயோசன முண்டு. சக்களத்திகள் சண்டை மும்முரத்தில் சட்டியைக் கீழே விட்டு விட்டதைப் போலவா இந்த மேதாவிகளின் போக்கும் இருக்க வேண்டும்?

"நாங்கள்" என்றால் யார்?

"தனிப்பட்ட ஒரு ஜாதியாரிடமோ, வகுப்பாரிடமோ ராஜாங்க லகான்களை நாங்கள் கொடுக்கத் தயாராயில்லை" என்று பம்பாய்க் கவர்னர் ஸர் பிரடரிக் ஸைக்ஸ் ஒரு பிரசங்கத்தில் கூறினர். "நாங்கள்" என்றால் யார்? ஸர் பிரடரிக் ஸைக்ஸும் அவர் வகுப்பாருமே யல்லவா? அவர்கள்தான் அதிகார லகான்களை இப்போது பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எந்த இந்திய வகுப்பையும் விட மிகச் சிறிய தொகையினரே இந்தியாவிலுள்ள ஐரோப்பியர். ஆனால் அவர்களிடம்தான் ஸர்வ அதிகாரமும் இருக்கிறது. இந்தியாவிலுள்ள எந்த வகுப்பினிடமோ, எல்லா வகுப்புக்களிடமுமோ அதன் அதிகாரத்தைக் கொடுக்க அதற்கு விருப்பமில்லை. இதுதானே கவர்னர் கூற்றிற்கு அர்த்தம்?

—அமிர்த பஜார் பத்திரிகை.

அட! விநோத ஜந்துக்களே!

"இந்திய மிதவாதி என்பான் ஓர் விநோத மான ஜந்து. அவனுடைய புத்தியோ வயது முதிர்ந்த தாத்தாவுடையதா யிருக்கிறது. ஆனால் அவனுடைய சித்தமோ சின்ன பாப்பா வுடையதா யிருக்கிறது. விஷயங்களைத் தெளிவாக அறிந்து கொள்ளும் சக்தி மிதவாதிக்கு உண்டு. ஆனால் அதே சமயத்தில் காரியம் செய்வதிலோ தவறாகவே செய்து முடிப்பது அவன் வழக்கம். முற்றிலும் புத்தியைக்கொண்டு நடத்த வேண்டிய விவாதமா யிருந்தால் மிதவாதியை நம்பி விடலாம். சரியான முறையிலேயே விவகாரம் செய்வான். ஆனால் காரியம் செய்ய நேர்ந்து விட்டாலோ, அவன் புத்தி புரண்டு போகிறது; அழுகைகூட வந்து விடுகிறது. ஓரோர் சமயங்களில் மறுத்துரைக்க முடியாத விஷயங்கள் நிகழ்ந்து விடுகின்றன. அவற்றால் ஏற்படக் கூடிய பலனைத் தடுக்க முடிவதில்லை. அதற்காக, உடனே, தனது குழந்தைத் தனமான நம்பிக்கையால், கடவுளைத் துதிக்க ஆரம்பித்து விடுகிறான். எந்தக் கடவுளை? தேவலோகத்திலுள்ள கடவுளையல்ல; பூலோகத்தில் தாங்களே தெய்வமென நினைத்துக் காரியம் செய்யும் கடவுள்களை".

—"முஸ்லிமான்" பத்திரிகை.

ஜெயில் 'பங்கா' யாருக்கு?

ஐக்கிய மாகாண சட்ட சபையில் ஸ்ரீயுத சிந்தாமணி கேட்ட சில அணித்தரமான கேள்விகளுக்கு சர்க்காரிட மிருந்து கிடைத்த பதில்கள் கவனிக்கத் தக்கவை

சிந்தாமணி கேள்வி:—"நயினிச் சிறையில் எத்தனை 'பி' வகுப்புக் கைதிகளுக்குப் பங்கா கொடுக்கப் பட்டிருக்கிறது? பங்கா இழுக்க எத்தனை கூலிகள்?"

சர்க்கார் பதில்:—"அங்குள்ள எல்லா ஐரோப்பியக் கைதிகளுக்கும் பங்கா போடப் பட்டிருக்கிறது. ஆறு கூலிகள் பங்கா இழுக்க நியமிக்கப் பட்டிருக்கின்றனர்."

சிந்தாமணி கேள்வி:—"பைஸாதாபாத் சிறையிலுள்ள 'பி' வகுப்பு ராஜீயக் கைதிகளுக்குப் பங்கா உண்டா?"

சர்க்கார் பதில்:—"கிடையாது. ஆனால் வைத்திய சம்பந்தமான காரணங்க ளேற்பட்டால் தான் இந்தியக் கைதிகளுக்கு பங்கா போடப்படுகின்றது."

இந்த வினா விடைகளில் நிறத் திமிர் பகிரங்கமாகத் தாண்டவ மாடுகின்றதன்றோ!

உப்பில்லாமல் கலக் கஞ்சி!

"உப்பில்லாமல் கலக் கஞ்சி குடிக்கும் உத்தமர்கள் நாங்கள் தான். எங்களைப் போன்ற 'ஸ்போர்ட்ஸ்மன்' குணம் யாருக்கு உண்டு?" என்று சில வெள்ளைக்காரர் பெருமை பேசிக் கொள்வதுண்டு. 'ஸ்போர்ட்ஸ்மன்' என்றால் தாராள புத்தி மிகவும் உடையவனென்றும், விளையாட்டுகளில் ஜாதி நிற பேதங்கள் பாராட்டாத சுபாவ முடையவனென்றும் அர்த்தம். ஆனால் சமீபத்தில் நேட்டாலில் என்ன நடந்ததாம் தெரியுமா? அங்குள்ள இந்திய முஸல்மான்கள் ஒரு கட்சியாகவும், வெள்ளையர்கள் இன்னொரு கட்சியாகவும் நின்று 'கிரிக்கெட்' ஆடுவதாக ஒரு ஏற்பாடு செய்திருந்தனராம். உடனே, "ஐயோ கறுப்பனோடு கலந்து விளையாடுவதா?" என்று வெள்ளையர்களுக்குள் கூக்குரலேற்பட்டதாம். கடைசியில் விளையாட்டு நடைபெறுபலே போய் விட்டதாம். 'ஸ்போர்ட்ஸ்மன்' என்றும், உப்பில்லாது கலக் கஞ்சி குடிப்பவர்களென்றும் வெள்ளையர் தங்களைப் புகழ்ந்து கொள்வது சுத்த ஹம்பக் வார்த்தைகள் என்பதில் சந்தேகமும் வேண்டுமா?

ஆலய தரிசனம்

(மகாத்மா காந்தி)

[விக்ரக வணக்கத்தில் நம்பிக்கை யில்லாத ஓர் உபாத்தியாயர் கேட்ட கேள்விகளுக்கு காந்திஜி பின்வருமாறு பதிலிறுத் திருக்கிறார்]

ஸ்ரீ ராமச்சந்திரனின் பிம்பத்தை தரிசிக்க எந்த ஹிந்துவும் கோயிலுக்குப் போயே தீர வேண்டும் என்பதில்லை. ஆனால், விக்கிரகத்தைத் தரிசிக்காமல் தியானம் செய்ய முடியாதவருக்கு அது கட்டாயம் அவசியமாகும். அவருடைய ராமன் கோயிலிலேயே வசிக்கிறார்; வேறெங்குமில்லை. இது துரதிர்ஷ்ட வசமான சங்கதியா யிருக்கலாம்; இத்தகையோர்களின் எளிய நம்பிக்கையைக் கெடுக்க நான் விரும்பவில்லை.

விக்ரக தரிசனத்தை விட மனிதன் செய்து வரும் பணியே மேலானதென தயக்க மின்றி நான் சொல்வேன். ஆனால் கர்மத்தைச் செய்ய ஓர் ஆற்றலையும், ஆத்மாவை உறுதி யாக்கிக் கொள்ள ஓர் தூய்மையையும் தரிசனமானது உண்டாக்குகின்றது. கர்மத்திற்கு ஈடாக தரிசனத்தைக் கூற முடியாதாயினும் மனிதனுக்கு தைரிய மூட்டும் சக்தி தரிசனத்திற்கு இருக்கிறது.

உலகில் மனிதனை மனிதன் வணங்குவது பரஸ்பரம் செய்து கொள்ளும் ஒரு மரியாதையாகும். இதில் விசேஷ மேது மில்லை. அது நல்லொழுக்கப் பயிற்சி பெற்றிருப்பதன் அடையாளமா யிருக்கலாம். உலக வாழ்க்கையில் மனித ஜன்மம் எடுத்தவர்கள் தவறு செய்வது சகஜமன்றோ! ஆனால் ஆலய வணக்கத்திலே ஜீவித ஈசுவரனை நாம் வணங்குகின்றோம். கற்பனைக் கெட்டாத பரிபூரணர் கடவுள் தான். உலகில் ஒரு மனிதனுக்கு நாம் எழுதும் கடிதங்களுக்குப் பதில்கள் கிடைத்த போதிலும் ஒரோர் வேளைகளில் கடிதம் வரைந்து கொள்பவர்களுக்குள் 'மன முறிவு' ஏற்படுவதுண்டு. பக்தனது மனக் கற்பனையின்படி கோயில்களில் உறையும் ஈசுவரனுக்கு எழுதப்படும் கடிதங்களுக்கோ பேனா, மை, வார்த்தை எதுவும் கிடையாது. வெறும் மௌன வணக்கமே அவன் கடிதம். 'மன முறிவு' ஏதும் ஏற்படுவதில்லை. தவறாமல் அவனுக்குப் பதிலும் கிடைத்து விடுகின்றது.

பக்தியுடைய ஹிந்து, தான் வணங்கும் அவதாரம் குற்றமில்லாததென நம்புகிறான். ஹிந்து பக்தனுக்கு 'பகவான் கிருஷ்ணன்' குற்றமே யில்லாதவர். ஆராய்ச்சிக்காரன் கூறும் கடும் தீர்ப்பைக் குறித்து அவனுக்குக் கவலையில்லை. ராமனிடமும் கிருஷ்ணனிடமும் பக்தி வாய்ந்த கோடிக்கணக்கான பக்தர்கள், இப்பெயர்களைத் தியானம் செய்ததன் மூலமாக தங்கள் வாழ்க்கையிலே மாறுதல் அடைந்திருக்கிறார்கள். ஈசுவரனது மிக உயர்ந்த குணமும் திருநாமமும் சத்தியமே என்று என் அறிவும் ஹிருதயமும் வெகு காலத்திற்கு முந்தியே உணர்ந்து விட்டதெனினும், 'ராமா' என்ற சொல்லின் மூலம் சத்தியத்தை அறிகிறேன். எனக்குச் சோதனை யேற்பட்டு மிக இருள் நிறைந்த நேரங்களில், என்னை இரட்சித்தது அந்த ஒரு திருநாமமே. அதுவே இன்னும் என்னை இரட்சித்துக் கொண்டிருக்கின்றது. அது குழந்தைப் பருவத்தில் ஏற்பட்ட சகவாசத்தின் பயனாக விருக்கலாம்; துளசி தாஸ் ராமாயணம் என்னை வசிகரம் செய்துவிட்டதன் பயனாகவு மிருக்கலாம். ஆனால், விஷயம் வாஸ்தவமா யிருக்கிறது. எனது முன்னோர் வசித்து வந்த மனையின் அருகேயுள்ள ஸ்ரீராமர் கோயிலுக்கு நான் தினந்தோறும் என் குழந்தைப் பருவத்தில் செல்லுவது வழக்கம். இவ்வரிகளை நான் எழுதும்பொழுது, அப்பொழுது நிகழ்ந்த காட்சிகள் என் நினைவுக்கு வருகின்றன. எனது ராமன் அப்பொழுது அந்தக் கோயிலில் வசித்து வந்தார். அவர் என்னை அநேக பயங்களினின்றும், பாவங்களிலிருந்தும் இரட்சித்தார். அது எனக்கு மூட நம்பிக்கையாயில்லை. அவ் விக்கிரகத்தின் பூசாரி கெட்ட மனிதராயிருந்திருக்கலாம். ஆனால் அவரிடம் எனக்கு ஒரு குற்றமும் தோன்றவில்லை. ஆலயத்துக்குள்ளே அநேகம் துர்ச் செயல்கள் நிகழ்ந்திருக்கக் கூடும். அவை பற்றியும் நான் ஒன்றுமறியேன். ஆதலால், அவை என்னைப் பாதிக்கவில்லை. என் சம்பந்தப்பட்ட மட்டில், எது உண்மையாயிருந்ததோ, இருக்கின்றதோ, அதுவே கோடிக் கணக்கான ஹிந்துக்கள் சம்பந்தப்பட்ட மட்டிலும் உண்மையா யிருக்கின்றது. தனது சமய சகோதரர்களான உயர்ந்த ஜாதியார் என்று சொல்லப்படும் மனிதருடன் சேர்ந்து ஆலயந் தொழ, எனது ஹரிஜன சகோதரர் விரும்புவாராயின், அவர் அவ்வாறே செய்ய வேண்டுமென்பது என் விருப்பம். மனித ஜாதிக்கு உண்டான ஆன்மார்த்த வேட்கையைப் பூர்த்தி செய்வது ஆலய வணக்கம்.

ஆசை காட்டி மோசம் செய்தல்

எப்படியாவது இந்தியாவிலிருந்து பர்மாவைப் பிரித்துவிட வேண்டு மென்பதே பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் நோக்கம். இந்தியா மந்திரியான ஹோர், பர்மா விஷயத்தில் செய்வதெல்லாம் பெரும் ஜாலமாகவே யிருக்கிறது. மூன்றாவது வட்ட மேஜை மகாநாட்டைச் சமாப்தி செய்தபொழுது ஹோர் மெள்ள ஒரு தூண்டிலை பர்மாவில் போட்டார். "பர்மா இந்தியாவுடன் சேர்ந்திருந்தாலும் இருக்கலாம்; பிரிந்தாலும் பிரியலாம். ஆனால் சேர்ந்தால், பிறகு பிரியவே முடியாது. நாங்கள் இடங் கொடுக்கவே மாட்டோம். பிரிவதா, சேர்ந்தே யிருப்பதா என்பதை அதுவே முடிவு செய்து சொல்லட்டும்" என்பதாக அவர் கூறினார்.

'பிரிவதா, வேண்டாமா' என்ற பிரச்னையின் மேலேயே பர்மாவில் தேர்தலும் நடந்தது? பின்னால் பிரியச் சுயேச்சையோடு, இப்பொழுது சேர்ந்திருக்க வேண்டும் என்று பர்மா சட்ட சபை தீர்மானம் செய்தது. இந்தியாவோடு சேர்ந்திருப்பதில் தான் பர்மாவுக்கு விருப்பம் என்பது அதிலிருந்து தெள்ளத் தெளிய விளங்கியது. என்றாலும், பர்மாச் சட்ட சபை சரியாகத் தீர்மானம் செய்யவில்லை என்று சாக்குச் சொல்லி விட்டார் ஹோர்.

இப்பொழுது, பர்மியர்களுக்கு ஆசை காட்ட ஹோர் ஆரம்பித்திருக்கிறார். அவர் இந்தியாவுக்கு ஒரு 'வெள்ளைக் கடுதாசி' அனுக்கிரகம் செய்திருக்கிறாரல்லவா? அதை முன்னும் பின்னும் காட்டி, "இந்தியாவில் சேர்ந்திருப்பதானால், இதே கடுதாசி தான் உங்களுக்கும்" என்பதாக அறிக்கை யொன்று விடுத்திருக்கிறார். அவருடைய அந்தரங்க எண்ணம் எதுவா யிருந்தாலும் சரி, அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையின் தோரணையைப் பார்த்தால், பூச்சாண்டி காட்டுவது போலவே யிருக்கிறது. பிளாங்கியான ஒரு கடுதாசியைக் காட்டி, "இந்தியாவுக்கு எந்த நாமம் போடப்பட்டதோ அதே உனக்கும்" என்று பர்மாவிடம் சொல்லுவதைப் போல இருக்கிறது அவர் அறிக்கை. இந்தியாவோடு சேர்ந்தாலோ பட்டை நாமம்! சேரா விட்டாலோ அப்பொழுது போடப் போவதும் அதே நாமந் தான்! இதுதான் ஹோர் அறிக்கையின் இரகஸ்யம்.

சர்க்கார் வைத்தியச் செலவு

சென்னைச் சட்டசபையில் முதன் மந்திரியான பொப்பிலி ராஜா, வைத்திய இலாக்காவுக்கு 81 லட்சத்துச் சில்லறை ரூபாய் மான்யங் கோரினார். சர்க்காருடைய வைத்தியக் கொள்கையைக் கண்டிப்பதற்காக, ஒரு அங்கத்தினர் மான்யத்தில் 11 ஆயிரத்துச் சொச்சத்தை வெட்டி விடப் பிரேரணை கொணர்ந்து பேசினார்.

"பெருவாரியாக வரி கொடுப்பவன் ஏழைக் கிராமவாசி. அவனுக்கு வைத்திய உதவிக்கு வழியைக் காணோம். காலைத் தலையை வலித்தால், தெய்வமே கதியென்று அவன் சும்மா உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டியவனா யிருக்கிறான். கிராமங்களில் வைத்திய வசதியைப் பரப்பச் சர்க்கார் ஒரு நடவடிக்கையையும் எடுத்துக் கொள்ளவில்லை.

"நகரங்களிலோ பிரபல டாக்டர்கள், கொழுத்த சம்பளங்களை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். லட்சக் கணக்காகப் பணத்தைப் போட்டுப் புதிது புதிதாகக் கட்டடங்களைக் கட்டி வருகிறார்கள். இந்தியா ஏழை நாடு. மிக அதிதமான செலவுகளைச் செய்வது தப்பிதம்.

"மேலும், ஐரோப்பியப் பெண்களையும், ஆங்கிலோ இந்தியப் பெண்களையும் நர்ஸு வேலைக்கு நியமித்துப் பெருத்தச் சம்பளங்களைக் கொடுத்து வருகிறார்கள். இதனாலும் செலவு அபரிமிதமாகப் போகிறது. இந்தியப் பெண்களை ஏன் அதிகமாக நர்ஸுகளாகப் பயிற்றுவித்து நியமிக்க லாகாது."

இதை யெல்லாம் எடுத்துரைத்து நன்றாகத் தான் அங்கத்தினர்கள் பேசினார்கள். ஆனால், இவை யாவும் ராஜா சாகிப்பின் காதில் ஏறவே யில்லை. அவர் தடபுடலாகவும் நீளமாகவும் பதில் பிரசங்கம் செய்ய ஆரம்பித்து விட்டார். ஆக்ஷேபணைகளுக்கு பதில் ஏதும் சொல்லா விடினும், ராஜா சாகிப்பின் பிரசங்கமோ ஓயாமல் நீண்டு கொண்டே போயிற்று. "ராஜா சாகிபே! நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு மேல் போய் விட்டீர்களே" என்று தலைவர் இடித்துரைத்த பிறகே, அவர் ஓய்ந்தார். வெட்டுப் பிரேரணை தோற்றது; ராஜா சாகிப் கேட்ட மான்யம், ஒரு செப்புக் காசு கூடக் குறையாமல் அப்படியே நிறைவேறியது. குலாம் சட்ட சபையின் மகிமையே மகிமை!

போட்டோவுக்குப் புதிய அர்த்தம்

ஒரு அச்சாபீஸில், எழுத்துக் கோர்ப்பவர்களுக்கு ஒரு ஆசிரியர்மீது வெகு கோபம். காரணம் மிக நியாயமானதுதான். இந்த ஆசிரியர் கையெழுத்து, பிரம்மா மனித மண்டையில் ஏதோ எழுதுகிருன் என்கிருர்களே, அதைப் போலத்தான் இருக்கும். அதாவது அவ்வளவு கிறுக்கல். இவர் கை யெழுத்து வந்து விட்டால், எழுத்துக் கோர்ப்பவர்கள் பாடு வெகு திண்டாட்டம்.

எழுத்துக் கோர்ப்பவரில் ஒருவன் கொஞ்சம் துடுக்கும் மிடுக்குமான பேர்வழி. ஒருநாள் அவன் முரட்டுச் சேவல் ஒன்றைப் பிடித்தான். ஒரு பெரிய இங்கிப் புட்டியில் அதன் காலைத் திணித்தான். சுத்தமான வெள்ளைக் கடுதாசி—ஹோர் வெளியிட்ட வெள்ளைக் கடுதாசியல்ல—ஒன்றை யெடுத்தான். மை தோய்ந்த காலையுடைய அந்தச் சேவல் கடுதாசியில் நடந்து செல்லுமாறு செய்தான். அப்பொழுது தான் அது ஹோரின் வெள்ளைக் கடுதாசி போலாயிற்று. அதில் குறுக்கும் நெடுக்கும் பல கிறுக்கல்கள் நிறைந்தன.

இந்தக் கடுதாசியை அவன் அந்த ஆசிரியரிடம் நீட்டினுன். "இது ஒன்றும் விளங்கவில்லை. கொஞ்சம் படித்துச் சொல்ல வேண்டும்" என்றான். ஆசிரியர் பல விதமாகத் திருப்பிப் பார்த்தார். என்றாலும் ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் கௌரவத்தைக் கை விடலாமா? "நம்மைப்போல யாரோ ஒரு ஆள் எழுதியிருக்கிறுன். இது புரியவில்லை யென்றோமானுல், நமக்கும் அவமானம் நேர்ந்துவிடும்" என்று எண்ணி, மனதிற்குத் தோன்றியபடி ஏதோ பிரமாதமாக அர்த்தம் பண்ணிப் படிக்கலானுர். "ஓ! கோழி பெரிய காலேஜில்தான் படித்திருக்கிறது போலிருக்கிறது" என்று கூறி நகைக்கலானுன் எழுத்துக் கோர்ப்பவன்.

கல்கத்தா கீழ்க்கோர்ட் செய்த ஒரு தீர்ப்பும், ஹைக்கோர்ட் அதை உறுதிப் படுத்தியதும் இந்தக் கதையையே நமக்கு ஞாபகப் படுத்துகின்றன. யாரோ ஒருவர் குறிப்பிட்ட சில போட்டோப் படங்களை வைத்திருந்தாராம் "அவை சட்ட விரோதமான சமாசாரத் தாள்கள்" என்பது இரண்டு கோர்ட்டுகளும் செய்த தீர்ப்பின் முக்கியாம்சம். போட்டோப் படம் சமாசாரத்தாளென்று அர்த்தம் செய்த மூளை அபாரமானதே யன்றோ!

போரின் ஜோரான பதில்கள்

"அப்பா, ராமு! எங்கே போனுய்?" என்று கேட்டாள் ஒரு தாயார். "காமு கூடப் போனேனம்மா" என்றான் பையன். "கண்மணி, காமு! எங்கே போனுய்?" என்று வினவினுள் அன்னை. "ராமு கூடப் போனேன்" என்றாள் காமு. தாயாருக்கு, தன் குழந்தைகள் போன விடம் இப்பொழுது மிக நன்றாக விளங்கி யிருக்கு மல்லவா? இந்தியச் சட்ட சபையில், ஸர் ஜோஸப் போரும் இதே மாதிரி சில கேள்விகளுக்குப் பதில் கூறியிருக்கிறுர்.

ஒருவர் கேள்வி :—இந்தியத் தோலுக்கும், பர்மாத் தோலுக்கும் ஏற்றுமதி வரி விதிப்பதில் என் மதிப்பு வித்தியாசம் பாராட்டப் படுகிறது?

போரின் பதில் :—பர்மாத் தோல் மட்ட ரகமானது. அதனுல் குறைந்த விலைக்கு விற்கிறது.

கேள்வி :—மட்ட ரகமானது என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்.

பதில் :—குறைந்த விலைக்கு விற்பதனுல்.

கேள்வி :—இந்தியத் தோல் விற்பனையிலும், பர்மியத் தோல் விற்பனையிலும் உள்ள விலை வித்தியாசம் என்ன?

பதில் :—விசாரித்துச் சொல்லுகிறேன்.

போரின் பதில்கள் எவ்வளவு ஜோராயிருக்கின்றன பார்த்தீர்களா? விலைக்குக் காரணம் ரகம்; ரகத்துக்குக் காரணம் விலை; விலையைக் கேட்டாலோ, தெரியாது. பேஷ்! சட்ட சபையிலுள்ள அத்தனை பெயரும் இத்தகைய பதில்களைக் கேட்டுக் கொண்டு சும்மா யிருக்கின்றுர்களே!

சாமளி தேவியின் பட்டினி

ஸஹாரன்பூர் ஜில்லா சிறையிலுள்ள சாமளி தேவி ஆர்ய சமாஜத்தைச் சேர்ந்தவள். ஆரிய சமாஜிகள் 'ஹோமம்' செய்து விட்டுத்தான் ஆகாரமெடுத்துக் கொள்வது வழக்கமாம். அந்த வழக்கத்தை சிறை நிர்வாகம் தடுத்து விட்டதால் சாமளி தேவி ஒருமாத காலமாக உபவாஸமிருக்கின்றுளாம். வெளியேயுள்ள அவளது புருஷனும் பட்டினி யிருக்கின்றுராம். இது சம்பந்தமாக வட நாட்டு ஆரிய சமாஜிகள் கிளர்ச்சி செய்து வருகின்றனர்.

காந்திஜி விடுதலை யடைந்தால்—

“தாற்காலிகமாக ஹரிஜனப் பிரச்னையில் தாம் ஈடுபட்டிருந்தாலும் விடுதலை யடைந்தால் பிறகு தாமென்ன செய்வாரென்பதைச் சொல்ல முடியாதென, காந்திஜி சர்க்காருக்கு எழுதியிருக்கிறாராம். இந்தக் கடிதத்தை வைஸ்ராய் தமது மந்திரி சபையில் வைத்து ஆலோசித்தாராம்.”

—ஹிந்துஸ்தான் டைம்ஸ்.

கல்கத்தா காங்கிரஸை நசுக்க

கல்கத்தாவில் நடைபெறப் போகும் காங்கிரஸ் மகா சபையின் வரவேற்பு கமிட்டித் தலைவர் டாக்டர் பிரபுல்ல கோஷும் பொதுக் காரியதரிசி போஸும் கைது செய்யப்பட்டு தலா மூன்று மாதம் தண்டனை விதிக்கப்பட்டனர். காங்கிரஸுக்கு வரும் டெலிகேட்டுகளுக்கு இருக்க இடந் தருபவர்கள் தண்டிக்கப்படுவார்களென்றும், காங்கிரஸ் வரவேற்பு கமிட்டியார் கூடுவதற்கு தரப்படும் இடங்களைப் போலீசார் கைப் பற்றுவார்களென்றும் கல்கத்தா போலீஸ் கமிஷனர் நோட்டீசு விடுத்திருக்கின்றார். மதுரை, திண்டுக்கல் முதலிய இடங்களினின்று கல்கத்தா காங்கிரஸுக்குப் பிரயாணமான 12 தொண்டர்கள் கைது செய்யப்பட்டு தலா 2 மாதம் தண்டனை யடைந்தார்கள். ஆக்ராவில் கல்கத்தா காங்கிரஸை விளம்பரம் செய்த ஐவர் கைது செய்யப்பட்டனர்.

சட்ட மறுப்பு இயக்கம்

ஆமதாபாத் ஜில்லா காங்கிரஸ் காரியதரிசி உத்திரவை மீறி நகருக்குள் பிரவேசித்ததற்காகக் கைதியானார். ஆமதாபாத் முனிஸிபல் தலைவருக்கு ரத்னகிரி என்ற ஊரை விட்டு நகரக் கூடாதென்று உத்தரவு. லாகூரில் ‘வெள்ளைக் கடுதாசி’யை பகிரங்கமாகக் கொளுத்தியதோடு தொண்டர்கள் ஊர்வலமும் நடத்தினாராம். குண்டூரிலும், பெஜவாடாவிலும், கஷ்டப்பட்டணத்திலும் காங்கிரஸ்காரர்களின் வீடுகள் சோதனை யிடப்பட்டன. கண்ணனூரிலும், கள்ளிக்கோட்டையிலும் மறியல் செய்த பல தொண்டர்களில் இருவருக்கு தலா 3 மாதம். தூத்துக்குடி பிச்சை பிள்ளைக்கு 5 மாதம். சேலம் காசிலிங்கப் பண்டாரத்தின் அபராதத் தொகையை வசூலிக்க, சில சாமான்கள் ஜப்தி செய்யப்பட்டன. கல்கத்தாவில் ‘சர்வாதிகாரி’யாயிருந்த ஸுனிதி தேவிக்கு 3 மாதம் தண்டனை.

டெல்லியில் வெளியாகும் “நேஷனல் கால்” என்னும் பத்திரிகையின் ஆசிரியரான பி. டி. சர்மாவின் வீட்டை போலீசார் ‘சிவப்பு’ பிரசுரம் சம்பந்தமாக சோதனை யிட்டதில் ஒன்றும் அகப்படவில்லை.

பாட்னாவில், பிகார் சர்வாதிகாரி நாராயண சிங்குக்கு 15 மாதமும், இந்தியா சட்ட சபை மெம்பர் தேவகி பிரசாதருக்கு 2 மாதமும் தண்டனை. சென்னையில் கேவல்ராம் கடையில் மறியல் செய்த மூவரும் காவலில் வைக்கப் பட்டிருக்கின்றனர்.

மத்திய மாகாணத்திலுள்ள ராஜீயச் சிறையாளர்களைச் சிறுகச் சிறுக விடுவித்துவிட சர்க்கார் முடிவு செய்து, 11 பேரை விடுவித்தனர்.

பம்பாயில் வக்கீல்களுக்கும், டாக்டர்களுக்கும் வருஷம் 1க்கு 10 ரூயும். நாட்டு வைத்தியருக்கு 5 ரூயும், இஞ்சினியர்களுக்கு 10 ரூயும் சுவல்ப வியாபாரிகளுக்கு 2 ரூபும், தெருவில் தூக்கிச் சென்று விற்பவர்களுக்கு ரூ. 1 விதமும் வரி போடுவதாக தீர்மானித்திருக்கிறார்களாம்.

வி. ஜே. படேல் வீர கர்ஜனை

கார்க் நகரில் வி. ஜே. படேல் கூறியதாவது: “டிவேலராவைச் சந்தித்து முக்கிய விஷயங்களைப் பற்றி பேசப்போகிறேன். வெள்ளைக் கடிதம் பயனில்லை. இந்திய சுதந்திரத்துக்காக மீண்டும் சிறைபுகத் தயார்”

முதலாளிகள் திருடர்கள்

அமெரிக்காவில் மரண தண்டனை விதிக்கப்பெற்ற சிங்காரா, மின்சார நாற்காலியில் உட்கார்ந்து சாவதற்கு முன், “உலகிலுள்ள முதலாளிகள் அனைவருமே திருடர்கள். உலகே! வந்தனம்! போய் வருகிறேன்!” என்று சொல்லி விட்டுச் செத்தானாம்.

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R Seshar, at the Lunar Printing Press. Triplicane Madras